# வேலை உரிமைகள் மையம்

இலண்டன் நகரை பணிபுரிய ஏதுவான இடமாக்க மேயர் அளித்த உறுதிமொழியின் ஒரு பகுதியாக, பல்வேறு வேலை உரிமைகள் பற்றியும், வேலையில் உங்களுக்கு ஏதாவது தொந்தரவு இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய விவரங்களையும் நாங்கள் வழங்குகிறோம்.

## மொழிபெயர்ப்பு குறித்த அறிவிப்பு

இந்தக் கையேடு ஆங்கிலத்திலிருந்து உங்கள் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதில் நாங்கள் இணைத்துள்ள சில ஆதாரங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கின்றன. நீங்கள் அவற்றைப் படிக்க விரும்பினால், ஒட்டுமொத்த வலைப்பக்கத்தையும் நீங்கள் மொழிபெயர்க்க முடிகின்ற ஒரு சேவையை Google Translate வழங்குகிறது. translate.google.com-க்குச் செல்ல ஒரு இணையதள பிரவுசரைத் திறக்கவும். இடதுபக்கம் உள்ள உரைப்பெட்டியில், நீங்கள் காண விரும்பும் வலைத்தளத்தின் முழு URL-ஐ (http:// உட்பட) தட்டச்சு செய்யவும். வலதுபக்கத்தில், வலைத்தளத்தில்

நீங்கள் காண இருக்கும் மொழியைத் தேர்ந்தெடுக்கவும். மொழிபெயர்க்கப்பட்ட வலைத்தளம் தோன்றும். இந்தத் தளத்தில் உள்ள இணைப்புகளை கிளிக் செய்வதன் மூலம், Google Translate இடைமுகத்தில் நீங்கள் இருக்கும் வரை அந்த மொழியில் மொத்த வலைத்தளத்தையும் நீங்கள் பிரவுஸ் செய்ய முடியும்.

Google Translate 100% துல்லியமானது அல்ல என்பதையும், சட்டரீதியான தகவல்களின் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அதை நம்ப முடியாது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இந்த ஆவணத்தில் பதில் கிடைக்காத சிக்கலான பிரச்சனை ஏதாவது உங்களுக்கு இருந்தால், நீங்கள் மையத்திற்குச் சென்று நேரடியாக ஆலோசனை பெறுவது சிறந்தது அல்லது 0300 123 1100 என்ற எண்ணில் Acas ஹெல்ப்லைனை அழைக்கவும். இச்சேவையை திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நீங்கள் பெறலாம், இதில் எல்லா மொழிகளிலும் உங்களுக்கு உதவி கிடைக்கும். ஒரு ஊடாடும் வரைபடம் மற்றும் ஆலோசனை மையங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது, எந்தெந்த மையங்கள் மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குகின்றன என்ற தகவலும் அதில்

இடம்பெற்றுள்ளது. உங்கள் உள்ளூர் மையம் மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கவில்லை என்றால், உங்களுக்காக மொழிபெயர்ப்பதற்கு ஒரு நண்பரை அல்லது குடும்ப உறுப்பினரை அழைத்து வந்தால் மிகவும் மகிழ்ச்சி.

## வேலை உரிமைகள் யாவை?

ஐக்கியப் பேரரசில் (UK), உங்கள் வேலையைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. இவை **சட்டரீதியான வேலை உரிமைகள் (statutory employment rights)** என அழைக்கப்படுகின்றன. நீங்கள் யாருக்காக வேலை செய்கிறீர்களோ அவர்கள், உங்கள் ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஒரு பகுதியாக உங்களுக்கு கூடுதலான உரிமைகள் அளிக்க வேண்டும். இவை **ஒப்பந்த வேலை உரிமைகள் (contractual employment rights)** என அழைக்கப்படுகின்றன.

## நான் வேலை உரிமைகளைப் பெற்றிருக்கிறேனா?

ஐக்கியப் பேரரசில்(UK) பணிபுரியும் அனைவரும் சில வேலை உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் அல்லது என்ன வேலை செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல.

நீங்கள் பெற்றுள்ள ஒப்பந்த உரிமைகள் உங்கள் ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் (ஒப்பந்தம் என ஒன்று போட்டிருந்தால்). நீங்கள் பெற்றுள்ள சட்டரீதியான உரிமைகளின் எண்ணிக்கை உங்கள் **வேலை நிலை (employment status)** என அழைக்கப்படுகின்ற ஒன்றைச் சார்ந்திருக்கிறது. இது நீங்கள் வேலை செய்யும் நபருடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை அல்லது ஒப்பந்த வகை மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

## எனது குடிவரவு நிலை காரணமாக எனக்கு வேலை உரிமைகள் இல்லை என்று நான் கவலைப்படுகிறேன்

உங்கள் குடிவரவு நிலை உங்கள் வேலை உரிமைகளைப் பாதிக்கக்கூடும்.

உங்கள் குடிவரவு நிலை குறித்து உங்களுக்கு ஆலோசனை தேவைப்பட்டால், நாங்கள் ஒரு

ஊடாடும் வரைபடத்தையும், குடிவரவு மற்றும் ஆலோசனை மையங்களின் பட்டியலையும் உருவாக்கியிருக்கிறோம்.

நீங்கள் மீட்பு இல்லாப் பொதுநிதியை (no recourse to public funds) (NRPF) பெற்றிருந்தால் மற்றும் நிதியுதவி மற்றும் வீட்டுவசதி ஆதரவை நீங்கள் பெற வேண்டியிருந்தால், **NRPF நெட்வொர்க் கருவி** அரசாங்கத்திடமிருந்து நீங்கள் என்ன உதவி பெற முடியும் என்பதை சரிபார்க்க உதவுகிறது.

நீங்கள் ஐரோப்பிய ஒன்றியக்(EU) குடிமகனாக இருந்து பிரெக்ஸிட் ஒப்பந்தத்திற்குப் பிறகு ஐக்கியப் பேரரசில்(UK) தங்கியிருப்பவராக இருந்தால், மேயரின் **EU Londoners Hub**-ஐப் பார்வையிடவும்.

## எனது வேலை நிலை என்ன?

மூன்று வகையான முக்கிய வேலை நிலைகளாவன:

1. பணியாளர் (Employee)
2. தொழிலாளி (Worker)

3. சுயதொழில் செய்பவர் (Self-employed)

உங்கள் வேலை நிலை என்ன என்பதைக் கண்டறிவது மிகவும் சிரமமானதாக இருக்கலாம் - ஆனால் நீங்கள் என்ன உரிமைகளைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமென்றால் அதைத் தெரிந்துக்கொள்வது மிக முக்கியமாகும்.

**Trades Union Congress (TUC) இணையதளத்தில் உங்கள் வேலை நிலையை நீங்கள் திட்டமிடலாம்.** அது 13 வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது.

உங்கள் வேலை நிலையையும், நீங்கள் என்ன உரிமைகளைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதையும் கண்டறிய உங்களுக்கு உதவ**Work Rights Centre**ஒரு கருவியைப் பெற்றிருக்கிறது.

## எனது உரிமைகள் யாவை?

வெவ்வேறு வேலை உரிமைகள் பற்றிய நிறைய பயனுள்ள தகவல்களை நாங்கள் ஒன்றாகத் திரட்டியிருக்கிறோம் அதில் கீழ்வருவனவும் அடங்கும்:

- **சமமாக நடத்தப்படுதல்** - பாகுபாடு (discrimination)மற்றும் துன்புறுத்தல்(**harassment**), தவறுகளை வெளிக்கொணர்பவர்களுக்கான (whistleblowers) பாதுகாப்பு, தொழிற்சங்கத்தில் சேர்வதற்கான உரிமை, நவீன அடிமைத்தனம் (modern slavery)
- **நீங்கள் உங்கள் வேலையை இழக்கும்போது உங்களுக்கு உள்ள உரிமைகள்** - மிகை ஊதியம், நியாயமற்ற வேலைநீக்கத்திலிருந்து (unfair dismissal) பாதுகாப்பு, அறிவிப்புக் காலங்கள் மற்றும் ஊதியம், TUPE (பொறுப்பேற்பு பணிமாறுதல் (வேலைப் பாதுகாப்பு)) (Transfer of Undertakings (Protection of Employment)).
- **சம்பளம் மற்றும் ஓய்வூதியம்** - தேசிய குறைந்தபட்ச ஊதியம் மற்றும் வாழ்க்கை ஊதியம், உங்கள் சம்பளத்திலிருந்து சட்டவிரோத பிடித்தங்கள் (unlawful deductions), வகைப்படுத்தப்பட்ட ஊதியச் சீட்டுகள் (itemised payslips), பணியிட ஓய்வூதியம் (workplace pension)

- **குடும்பங்கள் மற்றும் பெற்றோர்களுக்கான உரிமைகள்** - மகப்பேறு விடுப்பு மற்றும் ஊதியம், தந்தைமை விடுப்பு மற்றும் ஊதியம், பகிரப்பட்ட தந்தைமை விடுப்பு (shared parental leave) மற்றும் ஊதியம், தத்தெடுப்பு விடுப்பு மற்றும் ஊதியம்
- **வேலை நேரங்கள் மற்றும் நிபந்தனைகள்** - ஓய்வு இடைவேளைகள், உடல்நலம் மற்றும் பாதுகாப்பு, இசைவுடைய வேலையைக் கோருவதற்கான உரிமை (right to request flexible working), வேலை நேரங்கள்
- **வேலையில் ஓய்வு எடுத்தல்** - மருத்துவ விடுப்பு மற்றும் ஊதியம், வருடாந்திர விடுப்பு அல்லது விடுமுறை ஊதியம், அவசரகாலங்களுக்கான ஓய்வு நேரம் (time off for emergencies)

## வேலையில் இருக்கும் ஒரு பிரச்சனையை நான் எப்படி கையாள வேண்டும்?

உங்களுக்கு வேலையில் ஒரு பிரச்சனை இருந்தால், நீங்களாகவே அதை முயற்சி செய்து தீர்க்க நீங்கள் செய்யக்கூடிய நிறைய விஷயங்கள் இருக்கின்றன. நீங்கள் செய்யக்கூடிய சில விஷயங்கள் கடுமையான நேர வரம்புகளைக் கொண்டிருக்கலாம், எனவே நீங்கள் விரைவாகச் செயல்பட வேண்டியது முக்கியம்.

வேலையில் உங்களுக்கு உள்ள பிரச்சனைகளைக் கையாளுவதற்கு நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பற்றிCitizens Advice தங்கள் வலைத்தளத்தில் சில சிறந்த யோசனைகளைப் பதிவிட்டுள்ளனர்.

வேலையில் ஏற்படும் ஒரு பிரச்சனையைக் கையாள உதவி பெறுவதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்று தொழிற்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வது ஆகும். பொதுவாக சங்கங்கள் நீங்கள் சேர்வதற்கு முன் உங்களுக்கு நிகழ்ந்த ஒரு பிரச்சனைக்கு உதவ முடியாது. உங்களுக்கான சரியான தொழிற்சங்கத்தைக் கண்டறியவும்.

ஒரு பிரச்சனையை சுயமாக நீங்களே கையாளுவதற்குத் தடுமாறிக் கொண்டிருந்தால், நீங்கள் கூடுதல் உதவி பெறுவதற்கு நிறைய இடங்கள் இருக்கின்றன.

உதவிக்காக நீங்கள் யாரையாவது தொடர்புகொள்வதற்கு முன்னர், உங்களால் முடிந்த அளவுக்கு அதிகமான தகவல்களைத் தயாராக வைத்திருக்க வேண்டியது முக்கியமாகும். சாத்தியம் இருந்தால், இந்தத் தகவல்களை அச்சிட்டு உங்கள் கையில் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும். உங்கள் உள்ளூர் நூலகத்தில் நீங்கள் இதைச் செய்ய முடியும். பின்வருபவை உள்ளிட்ட விஷயங்கள் உங்களுக்குத் தேவைப்படலாம்:

- நீங்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சனை பற்றிய விளக்கம்
- நீங்கள் அனுபவித்துள்ள பாகுபாடு(discrimination) மற்றும் துன்புறுத்தல் பற்றிய விரிவான காலவரிசை

- உங்கள் வேலை ஒப்பந்தத்தின் ஒரு நகல் (அப்படி ஒன்று இருந்தால்)
- சமீபத்திய ஊதியச் சீட்டுகளில் ஒன்றின் நகல் (உங்களிடம் அவை இருந்தால்)
- உங்களுக்கும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையுடன் தொடர்புடைய உங்கள் முதலாளிக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்து அல்லது மின்னஞ்சல் தொடர்புகளின் நகல்
- பிரச்சனை பற்றி சம்பந்தப்பட்ட உங்கள் முதலாளியுடன் நீங்கள் மேற்கொண்ட உரையாடல்களின் விவரங்கள்

## வேலை உரிமைகள் பற்றிய பொதுவான ஆலோசனையை நான் எங்கே பெற முடியும்?

### தொலைபேசி வாயிலாக அல்லது மின்னஞ்சல் வாயிலாக

- வேலை உரிமைகள் பற்றி மிகவும் பொதுவான தகவல்களை நீங்கள் பெற விரும்பினால் **0300 123 1100** என்ற எண்ணில் Acas ஹெல்ப்லைனை நீங்கள் தொடர்புகொள்ளலாம். இதை திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நீங்கள் அணுக முடியும், மேலும் இதில் எல்லா மொழிகளிலும் உங்களுக்கு உதவி கிடைக்கும். உங்களுக்கு செவித்திறன் அல்லது பேச்சு குறைபாடு இருந்தால் நீங்கள் அவர்களுடைய Text Relay சேவையை **18001 0300 123 1100** என்ற எண்ணில் பயன்படுத்தலாம். உங்கள் முதலாளியுடன் உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் அவர்கள் உங்களுக்கு உதவக்கூடும். இது மத்தியஸ்தம் எனப்படுகிறது.

- நீங்கள் மாற்றுத்திறனாளியாக இருந்து உங்கள் வேலை உரிமைகள் பற்றி நீங்கள் ஆலோசனை பெற விரும்பினால், Disability Law Service (DLS) -ஐ **0207 791 9800** என்ற எண்ணில் நீங்கள் தொடர்புகொள்ளலாம் அல்லது advice@dls.org.uk-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

- Working Families என்பது பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் இலவச ஆலோசனை வழங்குகின்ற ஒரு தேசிய அறக்கட்டளை ஆகும். கூடுதல் தகவல்களை அறிந்துக்கொள்ள நீங்கள் அவர்களுடைய வலைத்தளத்தைப் பார்வையிடலாம், advice@workingfamilies.org.uk என்ற அவர்களுடைய இலவச உதவிமையத்துக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் (ஐந்து வேலை நாட்களுக்குள் பதிலளிப்பதை அவர்கள் நோக்கமாகக்

கொண்டிருக்கிறார்கள்) அல்லது **0300 012 0312** என்ற எண்ணில் அழைக்கலாம் (தற்சமயம் திங்கள் மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 12 மணி முதல் 2 மணி வரையிலும் செயல்படுகிறது)

- நீங்கள் தொழிற்சங்க (Trade Union) உறுப்பினராக இருந்தால் ஆலோசனை பெறுவதற்கு நீங்கள் அவர்களை நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும்
- ஒரு குறிப்பிட்ட பிரச்சனை, உதாரணமாக discrimination பாகுபாடு, அது தொடர்பாக வல்லுநரின் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் ஆதரவுச் சேவைகளை நீங்கள் பெற விரும்பினால், அந்தப் பிரச்சனை தொடர்புடைய பிரிவில் அதற்கான இணைப்புகள்

கொடுக்கப்பட்டுள்ளதை கீழே நீங்கள் காணலாம்.

## நேரடி ஆலோசனை

பகுதிநேரத் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய உதவி பெற நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும் என்பதைக் கண்டறிய உங்களுக்கு உதவ இலண்டனில் உள்ள ஆலோசனை மையங்களைக் காட்டும் நிலவரைபடம் ஒன்றை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். அவற்றின் விவரங்களை ஒரு பட்டியலிலும் நாங்கள் அளித்திருக்கிறோம். அவர்களில் பல பேர் தொலைபேசி வாயிலாக அல்லது மின்னஞ்சல் வாயிலாக சேவைகள் வழங்கியிருக்கிறார்கள், மற்றும் பல பேர் மொழிபெயர்ப்புச் சேவைகளையும் வழங்கியிருக்கிறார்கள். உங்கள் உள்ளூர் மையம் மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கவில்லை என்றால், உங்களுக்காக மொழிபெயர்ப்பதற்கு ஒரு நண்பரை அல்லது குடும்ப உறுப்பினரை நீங்களே அழைத்து வந்தால் மிகவும் மகிழ்ச்சி.

சில இடங்களில் பின்வரும் உதவிகள் மட்டுமே உங்களுக்குக் கிடைக்கலாம் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமாகும்:

- பொது ஆலோசனை அல்லது படிவங்கள் பூர்த்தி செய்தல் போன்ற குறிப்பிட்ட விஷயங்கள்
- நீங்கள் அவர்களுக்கு நெருக்கமாக வசித்தால் அல்லது வேலை செய்தால் (உ.ம். நீங்கள் அதே மாநகராட்சியில் வசிக்க வேண்டியிருக்கலாம்)
- நீங்கள் குறிப்பிட்ட நாடுகள் அல்லது பின்புலங்களிலிருந்து வந்திருந்தால் (உ.ம். நீங்கள் கிழக்கு அல்லது மத்திய ஐரோப்பாவிலிருந்து வந்திருந்தால்)
- நீங்கள் மிக அதிகமாகச் சம்பாதிக்கவில்லை என்றால் அல்லது பணத்துக்காகப் போராடுபவராக இருந்தால்

- ஒரு சந்திப்புநேரம் பதிவு செய்ய முதலில் நீங்கள் அவர்களைத் தொலைபேசியில் அழைத்திருந்தால்

உங்கள் பிரச்சனைக்கு உதவக்கூடிய சரியான இடத்தைக் கண்டுபிடிக்க நேரில் செல்வதற்கு முன் எங்கள் மையங்களின் பட்டியலில் நீங்கள் விவரங்களைத் தவறாமல் பரிசோதியுங்கள்.

## இலண்டனை பணிபுரிவதற்கு ஏதுவான சிறந்த இடமாக்குவதற்கு மேயர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

மேயர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது இலண்டனை ஒரு நியாயமான நகரமாக மாற்றுவதாக உறுதியளித்துள்ளார், இதன் முக்கியமான பகுதியாக இலண்டனில் பணிபுரியும் அனைவரும் அவர்களுடைய முதலாளியால் நல்ல முறையில் நடத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

இலண்டனில் செயல்படும் வணிகங்களையும் நிறுவனங்களையும் சிறந்த வேலைத் தரத்திற்கு (Good Work Standard) பதிவு

செய்யுமாறும், இது அவர்களுக்காக வேலை செய்யும் நபர்களை நியாயமாக நடத்துவோம் என அவர்களை உறுதியளிக்கச் செய்கிறது எனவும் இதன்மூலம் மேயர் கேட்டுக்கொள்கிறார்.

மேலும், இலண்டனில் வேலை செய்யும் அனைவரும் தங்கள் வேலை உரிமைகள் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் எனவும், அப்போது தான் அவர்கள் எப்போது மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்பதை அவர்களால் சொல்ல முடியும் என்றும் அவர் விரும்புகிறார். அவர்கள் நேர்மையற்ற முறையில் நடத்தப்பட்டால், அதற்காக ஏதாவது செய்வதற்கு அவர்கள் எங்கு உதவியும் ஆதரவும் பெற முடியும் என்பது தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என மேயர் விரும்புகிறார்.

# கொரோனாவைரஸ் மற்றும்

# வேலைவாய்ப்பு உரிமைகள்

உங்களுடைய வேலை அல்லது வருவாய் கொரோனாவைரஸினால் பாதிக்கப்பட்டிருந்தால், உங்களுடைய வேலைவாய்ப்பு உரிமைகள் பற்றி உங்களுக்கு தெரிந்திருப்பது முக்கியம். வேலைக்குச் செல்லாமல் இருக்க வேண்டியதிருந்தால், உங்களுடைய வேலை நேரம் குறைக்கப்பட்டிருந்தால் அல்லது உங்களுடைய வேலையை இழக்க நேரிட்டிருந்தால், அந்த நிலையை நீங்கள் சமாளிக்க உங்களுக்கு உதவும் வகையில் வேலையில் உங்களுடைய உரிமைகளைப் பெற அல்லது பிற உதவியைப் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

உங்களுடைய வேலைவாய்ப்பு உரிமை என்பது உங்களுடைய வேலையின் நிலையைச் சார்ந்திருக்கும். உங்களுக்கு இருக்கும் உரிமைகளைப் புரிந்துகொள்ளுவதற்கு உங்களுடைய வேலையின் நிலையை நீங்கள் முதலில் புரிந்துகொள்ளுவது முக்கியம்.

13 மே 2020 அன்றைய நிலவரப்படி இந்த ஆவணத்தில் உள்ள தகவல்கள் சரியானவை. சமீபத்திய தகவலுக்கு தயவுசெய்து அரசின் வலைதளத்தைப் பாருங்கள்.

# வேலையில் பாதுகாப்பாக இருப்பது பற்றிய கவலை உங்களுக்கு இருந்தால்

வேலைக்காக வெளியில் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலன்றி நீங்கள் வீட்டிலிருந்தே வேலை செய்ய வேண்டும் என்று அரசு பரிந்துரைக்கிறது. நீங்கள் வீட்டிலிருந்தே வேலை செய்வதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் உங்களுக்கு வேலை அளிப்பவர் செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது.

வீட்டிலிருந்து வேலை செய்வதற்கு சாத்தியம் இல்லை என்றால், - உதாரணமாக, போன்றவற்றின் கட்டுமானத்தில் அல்லது தயாரிப்பில் வேலை செய்கிறீர்கள் என்றால் - நீங்கள் வேலைக்குச் செல்வதை அரசு தாராளமாக ஊக்குவிக்கிறது. நீங்கள் வேலை செய்யும் இடத்தில் சமூக இடைவெளியைக் கடைபிடிப்பதற்கு அனுமதிப்பது உட்பட நீங்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி

செய்ய வேலையளிப்பவர் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். தங்களிடம் வேலை செய்யும் தொழிலாளிகளைப் பாதுகாப்பதற்கும், தங்களுடைய வேலை தளத்தை “Covid-19 இல்லாத பாதுகாப்பான இடமாக ஆக்குவதற்கும் அரசு தொழில்வழங்குவோருக்கான வழிகாட்டுதல்-ஐ உருவாக்கியுள்ளது.

நீங்கள் வேலைக்காக நிறுவனத்துக்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டால், அதை உங்களால் வீட்டிலிருந்தே செய்ய முடியும் என்று நீங்கள் உணர்ந்தால், அல்லது நீங்கள் வேலை செய்யும் தளத்திற்குச் செல்லுவது பாதுகாப்பற்றது என்று உணர்ந்தால், அல்லது உங்களுக்குப் பராமரிக்கும் பொறுப்பு இருப்பதால், உங்களுடைய வழக்கமான நேரத்தில் வேலை செய்ய முடியாத நிலையில் இருந்தால், நீங்கள் யாருக்காக வேலை செய்கிறீர்களோ அவரிடம் அதுபற்றிப் பேசுவது முக்கியம். அவர்கள் உங்களுடைய கவலைகளுக்கு செவிமடுக்க வேண்டும். நீங்கள் வேலை செய்யும் இடம் பாதுகாப்பற்றது என்று நீங்கள் உணர்ந்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி TUC சில வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது.

வைரஸ் தொற்றைத் தவிர்ப்பதற்கு சிலர் கூடுதலாக சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அரசு பரிந்துரைத்துள்ளது. இது ஷீல்டிங் என அறியப்படுகிறது. அரசின் பரிந்துரையின்பேரில் நீங்கள் ஷீல்டிங்கில் இருந்தால், அல்லது ஷீல்டிங்கில் உள்ள ஒரு நபருடன் வீட்டில் தங்கியிருக்க வேண்டியதிருந்தால், உங்களுக்கு வேலையளிப்பவர் உங்களை வேலைக்கு வரும்படி அழைக்க இயலாது. ஏறக்குறைய எல்லா சந்தர்ப்பங்களிலும், உங்களுக்கு வேலையளிப்பவர் உங்களுக்கு ஊதியம் அளிக்க வேண்டும். நீங்கள் சுகமில்லாமல் இருந்தால் அல்லது ஷீல்டிங்கில் இருந்தால், உங்களுக்கு என்ன ஊதியம் பெற உரிமை உள்ளது என்பதைப் பற்றிய எம்முடைய வழிகாட்டுதலைப் பாருங்கள்.

நீங்கள் கருவுற்றவராக இருந்தாலோ, 70 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தாலோ அல்லது சமத்துவச் சட்டத்தின்கீழ் ஒரு ஊனமுற்றவராகக் கருதப்படும் சுகாதார நிலையில் உள்ளவராக இருந்தாலோ உங்களை வேலைக்கு வரும்படி உங்களுக்கு வேலையளிப்பவர் நியாயமற்ற முறையில் வற்புறுத்த முயற்சித்தால், அது சட்டவிரோதமான பாகுபடுத்துதலாகக்

கருதப்படலாம். ACAS-ல் இது பற்றிய சில வழிகாட்டுதல்கள் உள்ளன.

வேலை செய்யும் இடத்தில் ஏதாவது தவறு நடந்தால், உதாரணமாக, நீங்கள் வேலை செய்யும் இடம் பாதுகாப்பற்றதாக இருந்தால், அதுபற்றி உங்களுக்கு வேலையளிப்பவரிடம் அல்லது மற்ற பொறுப்பான ஒருவரிடம் நீங்கள் சொல்ல வேண்டியிருக்கலாம். இது விசில்புளோயிங் (எச்சரிக்கை ஒலி எழுப்புதல்) என அழைக்கப்படுகிறது. நீங்கள் இதைச் செய்தால், உங்கள் முதலாளி உங்களை நியாயமற்ற முறையில் நடத்தக்கூடாது அல்லது வேலைநீக்கம் செய்யக் கூடாது அல்லது உங்கள் மீது குற்றம் சுமத்தக் கூடாது. எச்சரிக்கை ஒலி எழுப்புவோருக்கான (விசில்புளோவர்ஸ்) பாதுகாப்பு பற்றிய எமது வழிகாட்டுதல்களைப் பார்க்கவும்

உங்கள் முதலாளி உங்களைத் துன்புறுத்தியோ அல்லது அச்சுறுத்தியோ உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. அவர்களுக்காக நீங்கள் வேலை செய்ய விரும்பாவிட்டால், உங்களை அவர்கள் வெளியேறவிட வேண்டும். இதுதான் நவீன அடிமைத்துவம் என அழைக்கப்படுகிறது. நவீன அடிமைத்துவம்

மற்றும் கொரோனாவைரஸ் பற்றிய வழிகாட்டுதலை அரசு அளித்துள்ளது. உங்களுக்கு வேலையளிப்பவருடன் சேர்ந்து வாழும் ஒரு வீட்டு அல்லது பராமரிப்புப் பணியாளராக நீங்கள் இருந்தால் உங்களுக்கான ஆலோசனையும் இதில் அடங்கும். நீங்கள் நவீன அடிமைத்துவத்தை அனுபவித்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய எம்முடைய வழிகாட்டுதலைப் பார்க்கவும்

# கொரோனாவைரஸ் காரணமாக நீங்கள் வேலையிலிருந்து நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதிருந்தால்

நீங்கள் சுகமில்லாதிருப்பதால், அல்லது சுகமில்லாத ஒருவருடன் தங்கியிருக்க வேண்டியதிருப்பதால், மற்றும் வீட்டிலிருந்து உங்களால் வேலை செய்ய முடியாதிருந்தால், அரசினால் சுய-

தனிமைப்படுத்திக் கொள்ளும்படி நீங்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தால் பெரும்பாலான சமயங்களில் சுகவீன ஊதியத்தை (sick pay) நீங்கள் பெறலாம் என அரசு தெரிவிக்கிறது.

சுகவீன ஊதியத்தைப் (sick pay) பெற எல்லாருக்கும் தகுதியில்லை. சுகவீன ஊதியத்தைப் (sick pay) பெற நீங்கள் தகுதிபெறுவீர்களா என்பதைச் சரிபார்க்கவும்.

நீங்கள் போதுமான ஊதியம் பெறவில்லை என்பதனால் சுகவீன ஊதியத்தை (sick pay) பெற நீங்கள் தகுதிபெறாவிட்டால் யுனிவர்சல் கிரெடிட் உட்பட்ட பலன்களைப் பெற நீங்கள் விண்ணப்பிக்க இயலலாம்.

நீங்கள் ஷீல்டிங்கில் இருந்தால் அல்லது அல்லது ஷீல்டிங்கில் உள்ள ஒரு நபருடன் வீட்டில் தங்கியிருக்க வேண்டியிருந்தால், உங்களுக்கும் சுகவீன ஊதியம் (sick pay) கிடைக்கலாம். நீங்களும் உங்களுக்கு வேலையளிப்பவரும் சம்மதித்தால், உங்களுக்கு வேலையளிப்பவர் உங்களை “ஆன் ஃபர்லோ“-வில் வைத்து கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்புத் திட்டத்தின் (Coronavirus Job Retention Scheme) வழியாக ஊதியமளிக்கலாம். கொரோனாவைரஸ்

வேலை தக்கவைப்பு திட்டத்திற்கு (Coronavirus Job Retention Scheme) நீங்கள் தகுதிபெறுவீர்களா எனச் சரிபார்க்கவும். உங்களுக்கு வேலையளிப்பவரிடம் இதுபற்றி நீங்கள் கலந்துரையாடலாம். கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டம் (Coronavirus Job Retention Scheme) வரும் அக்டோர் 2020 முடிய நடைமுறையில் இருக்கும். ஜூலை இறுதிவரை இந்தத் திட்டத்தின் நடைமுறையில் மாற்றங்கள் இருக்காது. சமீபத்திய தகவலுக்கு அரசின் வலைதளத்தைப் பார்க்கவும்.

நீங்கள் சுய தொழில் செய்பவர் என்பதால் சுகவீன ஊதியத்தை(sick pay) பெற நீங்கள் தகுதிபெறாவிட்டால், நீங்கள் அரசின் சுய வேலை வருவாய் ஆதரவுத் திட்டத்திற்குத் (Self-Employed Income Support Scheme) தகுதி பெறலாம். நீங்கள் ஒரு நிறுவனத்தில் வேலை செய்தாலும் சுய வேலை செய்பவராக வேலை நிலை இருந்தால், நீங்கள் வேலை செய்யும் நிறுவனத்தில் அதற்கேயுரிய சுகவீன ஊதியத் திட்டம் (sick pay scheme) இருக்கலாம். உங்களுடைய நிறுவனத்தின் திட்டத்தின்கீழ் சுகவீன ஊதியத்தை (sick pay) எவ்வளவு காலத்திற்குக் கோர முடியும் என்பதில் கட்டுப்பாடுகள் இருக்கலாம்.

பொது நிதிகளுக்கு வழிவகை இல்லை (No Recourse to Public Funds) என்ற புலம்பெயர்தல் சூழலில் இருந்தால் சுகவீன ஊதித்தைப் (sick pay) பெறுவதிலும், அரசின் சுய வேலை வருவாய் ஆதரவுத் திட்டத்தில் (Self-Employed Income Support Scheme) பலன் பெறுவதிலும் உங்களுக்குக் கட்டுப்பாடு ஏதும் இல்லை. பொது நிதிகளுக்கு உங்களுக்கு வழிவகை இல்லாவிட்டால் (No Recourse to Public Funds) **NRPF நெட்வொர்க் வலைதளத்தில்** உங்களுடைய உரிமைகள் பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் பெற முடியும்..

நீங்கள் கருவுற்றிருந்தால், உங்களுக்கு அதிக அபாயம் இருக்கலாம் என்பதால், அத்தியாவசியமான காரணங்களுக்காக அன்றி நீங்கள் வீட்டைவிட்டு வெளியில் செல்லக்கூடாது. கருவுற்றிருக்கும்போது உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொண்டிருந்தால் உங்களுடைய வேலை வாய்ப்பு உரிமைகள் பற்றிய வழிகாட்டுதலுக்கு**மெட்டர்னிட்டி ஆக்ஷனை (Maternity Action)** பாருங்கள்.

அரசின் ஆலோசனையின்படி உங்களை நீங்களே தனிமைப்படுத்திக்கொண்டிருப்பதால் வேலைக்குச் செல்ல இயலாவிட்டால், **NHS**

111 ஆன்லைனிலிருந்து பெரும்பாலான சமயங்களில் ஒரு 'தனிமைப்படுத்தல் குறிப்பை" பெற முடியும். நீங்கள் மருத்துவரிடம் செல்ல வேண்டியதில்லை.

# கொரோனாவைரஸ் காரணமாக நீங்கள் வேலையை இழந்திருந்தால்

கொரோனாவைரஸ் பரவுவதைத் தடுக்க பப்புகள், உணவகங்கள் மற்றும் சில கடைகள் உட்பட்ட சில தொழில்களை மூடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பலர் பொருளாதார ரீதியாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு வேலையளிப்பவரிடம் உங்களுக்கு அளிப்பதற்கு போதுமான வேலையில்லாவிட்டால், நீஙகள் வேலைக்கு வர வேண்டாம் என்று அவர் உங்களைக் கேட்கலாம்.

நீங்களும் உங்களுக்கு வேலையளிப்பவரும் சம்மதித்தால், அவர்களால் இயங்க முடியாதிருந்தால் அல்லது கொரோனாவைரஸ் காரணமாக உங்களுக்கு எந்த வேலையும் கொடுக்க இயலாதிருந்தால்

உங்களுக்கு வேலையளிப்பவர் சம்பளப்பட்டியலில்(payroll) உங்களை வைத்திருக்கலாம். இது, “ஆன் ஃபர்லோ” (‘on furlough’) என அழைக்கப்படுகிறது. கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டத்திற்கு (Coronavirus Job Retention Scheme) நீங்கள் தகுதிபெறுவீர்களா எனச் சரிபார்க்கவும்.. கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டம் (Coronavirus Job Retention Scheme) வரும் அக்டோர் 2020 வரை நடைமுறையில் இருக்கும். ஜூலை இறுதிவரை இந்தத் திட்டத்தின் நடைமுறையில் மாற்றங்கள் இருக்காது. சமீபத்திய தகவலுக்கு அரசின் வலைதளத்தைப் பார்க்கவும்.

இந்த **கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டத்தின்கீழ்** (Coronavirus Job Retention Scheme) உங்களுடைய உரிமைகளைப் பற்றி TUC-யிடம் வழிகாட்டுதல்கள் உள்ளன. உங்களிடம் ஏதும் ஒப்பந்தமிருந்திருந்தால், உதாரணமாக நீங்கள் ஒரு முகமையில் வேலை செய்பவராக இருந்தால் அல்லது சுழிய நேர ஒப்பந்தத்தில் இருந்தால், கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டத்தின்கீழ் (Coronavirus Job Retention Scheme) நீங்கள் தகுதிபெறுவீர்கள்.

நீங்கள் வேலை இழந்து, கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டத்தின்கீழ் (Coronavirus Job Retention Scheme) நீங்கள் பலன் பெறாவிட்டால், நீங்கள் என்ன செய்யலாம் என்பது பற்றிய சில வழிகாட்டுதல்களை சிட்டிசன்ஸ் அட்வைஸ் (Citizens Advice) வழங்குகிறது.

கொரோனாவைரஸ் காரணமாக உங்களுடைய வேலை நேரம் அல்லது ஊதியம் குறைக்கப்பட்டால், மணி அட்வைஸ் சர்விஸை (Money Advice Service) அணுகவும்.

நீங்கள் சுய வேலை செய்பவராக இருந்து, கொரோனாவைரஸ் காரணமாக உங்களுடைய தொழிலை இழந்திருந்தால், நீங்கள் அரசின் சுய வேலை வருவாய் ஆதரவுத் திட்டத்தில் (Self-Employed Income Support Scheme) தகுதி பெறலாம்.

உங்களுடைய வருவாய் பற்றி கவலைப்பட்டால், அவசரமாக பணம் தேவைப்பட்டால், யுனிவர்சல் கிரெடிட் உட்பட்ட பலன்களைப் பெற நீங்கள் விண்ணப்பிக்க இயலலாம். உங்களுக்கு உதவ உங்களுடைய உள்ளூர் கவுன்சிலிடமும் நிதி ஆதரவுத் திட்டங்கள் இருக்கலாம்.

பொது நிதிகளுக்கு வழிவகை இல்லை (No Recourse to Public Funds) என்ற புலம்பெயர்தல் சூழ்நிலை இருந்தால், நலத்திட்ட ஆதரவுகளை நீங்கள் பெறுவதற்கு முன்னர் உங்களுக்கு வழிகாட்டுதல்கள் தேவைப்படலாம். NRPF நெட்வொர்க்ஸ் ஃபேக்ட்ஷீட்-பற்றி நீங்கள் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

# குழந்தைகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ நீங்கள் பராமரிப்பு வழங்கினால்

பள்ளிகள் மற்றும் பாலர் பள்ளிகள் மூடப்பட்டதன் காரணமாக, நீங்கள் குழந்தைகளையோ அல்லது மற்றொரு உறவினரையோ பராமரிக்க வேண்டியிருப்பதால், வேலைக்கு செல்ல இயலாதிருக்கலாம்.

நீங்கள் ஒரு தொழிலாளியாக இருந்து உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அவர்களைக் கவனித்துக் கொள்ளுவதற்காக ஊதியமில்லாமல் சிறிது நேரத்தை அவர்களுக்காகச் செலவிட வேலையளிப்பவர்

உங்களுக்குக் கொடுக்க வேண்டும். இது, ஊதியமற்ற பெற்றோர் விடுப்பு என அழைக்கப்படுகிறது.

குழந்தைகளைப் பராமரிக்க வேண்டியதிருக்கிறது என்பதனால் உங்களால் வேலை செய்ய முடியாதிருந்தால், கொரோனாவைரஸ் வேலை தக்கவைப்பு திட்டத்திற்கு (Coronavirus Job Retention Scheme) நீங்கள் தகுதிபெறலாம். உங்களுக்கு வேலையளிப்பவரிடம் இது பற்றி நீங்கள் கலந்துரையாடலாம்.

மற்றவர்களைக் கவனித்துக் கொள்ளுவதற்காக நேரத்தை எடுத்துக் கொள்ளுவதற்கான உங்களுடைய உரிமைகள் பற்றிய வழிகாட்டுதல்களை ஒர்க்கிங் ஃபேமிலீஸ் -ல் பெற முடியும்.

## உங்களுக்கு கூடுதல் ஆலோசனை தேவைப்பட்டால்

லண்டனில் உள்ள பெரும்பான்மையான ஆலோசனை மையங்கள் நேருக்கு நேர் ஆலோசனையை இப்போது வழங்குவதில்லை. சிலர் உங்களுக்கு தொலைபேசி அல்லது இணையத்தின் வழியாக ஆலோசனை வழங்கலாம். **இங்கு**

ஒரு இன்டராக்டிவ் வரைபடம் லண்டனில் உள்ள ஆலோசனை மையங்களுக்கானது கொடுக்கப்பட்டுள்ளது அவர்களுடைய விவரங்களை நாங்கள் ஒரு பட்டியலாக கொடுத்திருக்கிறோம். தொலைபேசி வழி ஆலோசனை வழங்க முடியுமா என்பதைப் பார்க்க ஒவ்வொரு ஆலோசனை மையத்தின் வலைதளத்தையும் பாருங்கள்.

வேலை செய்யும் இடத்தில் நடந்த பிரச்சனையைப் பற்றிப் பேச ACAS உதவி மைய எண் 0300 123 1100-ஐ அழைக்கவும்.

யு.கே அல்லாத லண்டன்வாசிகளுக்கு ஏற்ற ஆதரவை வழங்கும் சிறப்பு நிறுவனங்கள் உள்ளன. பல்வேறு மொழிகளில் தொலைபேசி வழியான ஆதரவை யுனைடட் வாய்சஸ் ஆஃப் தி வேர்ல்டு (United Voices of the World), தி வொர்க் ரைட்ஸ் சென்டர் (the Work Rights Centre), தி ஈஸ்ட் ஈரோப்பியன் ரிசோர்ஸ் சென்டர் (the East European Resource Centre) மற்றும் லேட்டின் அமெரிக்கன் விமன்ஸ் ரைட்ஸ் சர்விஸ் ( Latin American Women's Rights Service) ஆகியவை அளிக்கலாம். அதிக ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுடன் யு.கே அல்லாத நாட்டினருக்கான ஒரு ஆதரவுப் பக்கத்தையும் நாங்கள் கொடுக்கிறோம்.

COVID-19 பெருந்தொற்று காரணமாக நீங்கள் வேலை இழந்திருந்தால் அல்லது உங்களுடைய வருவாய் குறைந்திருந்தால், அது மிகவும் மனஅழுத்தம் தருவதாக இருக்கலாம். அதன் காரணமாக, அதிகமான பதற்றத்தையும், மனச் சோர்வை அனுபவிக்கலாம். உங்களுக்கு உதவியாக இருக்க கூடிய ஆதாரங்களும் ஆதரவும் த்ரைவ் லண்டன் (Thrive London) மூலம் கிடைக்கின்றன.

COVID-19 பெருந்தொற்றுப் பரவலின்போது உங்களுடைய வருவாய் குறைந்திருந்தால், ஒரு பட்ஜெட் படிவத்தை நிரப்ப நீங்கள் விரும்பலாம். வருவாய் இழப்பு எப்படி உங்களைப் பாதிக்கலாம் என்பதை நன்கு புரிந்துகொள்ள உதவும் வகையில் உங்களுடைய எல்லா வரவுகளையும் செலவுகளையும் தொகுக்கும் வகையில் தி சேரிட்டி மணி அன்டு மென்டல் ஹெல்த் (The charity Money and Mental Health) ஒரு படிவத்தை தயாரித்துள்ளது.

கொரோனாவைரஸ் பெருந்தொற்றுக் காலத்தில் மனநலம் மற்றும் பணம் பற்றிய ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

உங்களுடைய வருவாயில் மாற்றத்தைப் புரிந்துகொள்ளவும் அதைத் தீர்க்கவும் கூடுதல் உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்களுக்கு உதவ பாலிசி இன் பிராக்டிஸ் (Policy in Practice)-இடம் ஒரு அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் (FAQs) பட்டியலும் ஒரு ஆன்லைன் சேட்ரூமும் உள்ளன.

கொரோனாவைரஸ் மற்றும் வேலையைப் பற்றிய பிரச்சனைகள் சார்ந்த தொடர்ச்சியான **வெபினார்கள்** TUC-யிடம் உள்ளன.

## சமமாக நடத்தப்படுதல்

நீங்கள் பணிபுரியும் இடத்தில் சமமாக நடத்தப்படுவதை உறுதிசெய்ய எண்ணற்ற உரிமைகள் உள்ளன.

இந்த உரிமைகளில் சில குறிப்பிட்ட வேலை நிலைமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை நினைவில்

கொள்ளவேண்டியது முக்கியமாகும் (ஒரு **employee பணியாளர்**, அல்லது ஒரு **worker தொழிலாளி** போன்று).

## சமமாக நடத்தப்படுதல்

### பாகுபாடு (Discrimination) மற்றும் துன்புறுத்தல் (harassment)

பின்வருபவை காரணமாக உங்கள் முதலாளி உங்களை மாறுபாடாக நடத்த முடியாது:

- உங்கள் வயது காரணமாக
- நீங்கள் உடற்குறைபாடு கொண்டவராக இருந்தால்
- நீங்கள் பாலினமாற்றமுடையவர்
- நீங்கள் திருமணமானவர் அல்லது உரிமையியல் துணைவரைப் பெற்றிருப்பவர்
- நீங்கள் கர்ப்பிணி அல்லது சமீபத்தில் உங்களுக்குக் குழந்தை பிறந்திருப்பதால் வேலைக்கு விடுப்பு எடுத்திருக்கிறீர்கள்

- உங்கள் இனம் காரணமாக, உங்கள் நிறம், தேசியம் அல்லது இனமரபு / தேசிய பூர்வீகம் உட்பட
- உங்கள் மதம், நம்பிக்கை அல்லது மதம் / நம்பிக்கை இல்லாமை காரணமாக
- உங்கள் பாலினம் காரணமாக
- உங்கள் பாலியல் நாட்டம் காரணமாக

அவர்கள் அவ்வாறு செய்தால் அவர்கள் சட்டத்தை மீறுபவர்கள் ஆவார்கள். இது **பாகுபாடு (discrimination)** எனப்படுகிறது. அதோடு, மேலே உள்ளவற்றின் அடிப்படையில் அவர்கள் உங்களை சங்கடமாக, மிரட்டப்படுபவர்களாக, இழிவுபடுத்தப்பட்டவர்களாக உணரச்செய்ய முடியாது அல்லது ஒரு விரோதமான சூழ்நிலையை உருவாக்க முடியாது. இது **துன்புறுத்தல் (harassment )** எனப்படுகிறது.

இது உங்களை சங்கடமாக, மிரட்டப்படுபவர்களாக, இழிவுபடுத்தப்பட்டவர்களாக உணரச்செய்கின்ற அல்லது உங்களுக்கு ஒரு

விரோதமான சூழ்நிலையை உருவாக்குகின்ற பாலியல் துன்புறுத்தலை (sexual harassment)உள்ளடக்குகிறது.

பணியாளர்கள் (Employees) மற்றும் தொழிலாளிகள் (workers ) பாகுபாடு (discrimination) மற்றும் துன்புறுத்தலில் (harassment) இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். நீங்கள் சுயதொழில் செய்பவராக இருந்தாலும் பாதுகாக்கப்படலாம்.

பாகுபாடு (discrimination)அல்லது துன்புறுத்தல் (harassment) சார்ந்த பிரச்சனையால் நான் பாதிக்கப்பட்டிருக்கலாம் என நினைக்கிறேன்.

சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஆணையத்தின் (EHRC) இணையதளத்தில் பாகுபாடு (discrimination) மற்றும் துன்புறுத்தல் (harassment) பற்றிய மிக விரிவான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

_ Citizens Advice இணையதளத்தில் இருக்கின்ற ஒரு சரிபார்ப்புக் கருவி நீங்கள் வித்தியாசமான முறையில்

நடத்தப்படுகிறீர்களா என்பதைப் புரிந்துக்கொள்ள உங்களுக்கு உதவக்கூடும்.

## நீங்கள் பகுதிநேரப் பணியாளராக இருந்தால் உங்கள் உரிமைகள்

### பகுதிநேரப் பணி

நீங்கள் பகுதிநேரப் பணியாளராகப் பணிபுரியும்போது பெரும்பாலான நேரங்களில் உங்கள் முதலாளி உங்களை மாறுபாடாக நடத்த முடியாது. முழுநேரப் பணியாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதே உரிமைகளை அவர்கள் உங்களுக்கும் கொடுத்தாக வேண்டும்.

பகுதிநேர வேலை உரிமைகள் **முதலாளிகளுக்கும் (Employees) தொழிலாளிகளுக்கும் (workers )** மட்டுமே.

### நான் பகுதிநேரப் பணியாளராக இருப்பதால் மாறுபாடாக நடத்தப்படுவதாக நினைக்கிறேன்:

பகுதிநேரத் தொழிலாளிகளுக்கான உரிமைகள் பற்றிய கூடுதல் தகவல்கள் அரசாங்கத்தின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

## வேலையில் மோசமான செயல்பாடு பற்றிப் புகாரளித்தல்

### தவறுகளை வெளிக்கொணர்பவர்களுக்கான (whistleblowers) பாதுகாப்பு

சில நேரங்களில் பெரும்பாலான தொழிலாளிகளுக்கு அல்லது பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதமாக வேலையில் நடக்கும் மோசமான செயல்பாடு பற்றி உங்கள் முதலாளியிடமோ அல்லது வேறொருவரிடமோ நீங்கள் சொல்லவேண்டியிருக்கலாம்.
இது **தவறுகளை வெளிக்கொணர்தல் (whistleblowing)** எனப்படுகிறது.
நீங்கள் இதைச் செய்தால், உங்கள் முதலாளி உங்களை நியாயமற்ற முறையில் நடத்தக்கூடாது அல்லது வேலைநீக்கம் செய்யக் கூடாது அல்லது உங்கள் மீது குற்றம் சுமத்தக் கூடாது.

தவறுகளை வெளிக்கொணர்பவர்(**whistleblowers**) உரிமைகள் **பணியாளர்கள்(Employees)** மற்றும் **தொழிலாளிகளுக்காக(workers )** மட்டுமே.

**தவறுகளை வெளிக்கொணர்ந்த (whistleblowing) காரணத்தினால் நான் நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதாக நினைக்கிறேன்.**

**the Protect இணையதளத்தில்** தவறுகளை வெளிக்கொணர்பவர்களின் (**whistleblowers**) பாதுகாப்பு பற்றிய கூடுதல் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. தவறுகளை வெளிக்கொணர்பவர்களுக்கு (**whistleblowers**) இரகசிய ஆதரவும் ஆலோசனையும் வழங்குகின்ற அறக்கட்டளை ஒன்று உள்ளது.

## வன்முறை, அச்சுறுத்தல்கள் அல்லது கட்டுப்படுத்தும் நடத்தையிலிருந்து பாதுகாப்பு

### நவீன அடிமைத்தனம் (Modern Slavery)

உங்கள் முதலாளி உங்களைத் துன்புறுத்தியோ அல்லது அச்சுறுத்தியோ உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

நீங்கள் அவர்களுக்காக வேலை செய்ய விரும்பாவிட்டால் அவர்கள் உங்களை வேலையில் இருந்து செல்ல அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால் அவர்கள் விதியை மீறுபவர்கள் ஆகிறார்கள். இது **நவீன அடிமைத்தனம்(Modern Slavery)** எனப்படுகிறது.

நவீன அடிமைத்தனம்(**Modern Slavery**) ஒரு கிரிமினல் குற்றம் ஆகும். இதன் பொருள் என்னவென்றால், ஒருவருடைய வேலை நிலை அல்லது குடிவரவு நிலை என்ன என்பதைப் பொருட்படுத்தாமல், **அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுவது.**

**நவீன அடிமைத்தனத்துக்கான (Modern Slavery)அடையாளங்களை நான் எப்படி கண்டுபிடிப்பது?**

நவீன அடிமைத்தனத்தின் (**Modern Slavery**)அடையாளங்கள் பற்றிய கூடுதல் தகவல்களை Unseen அறக்கட்டளையால் நடத்தப்படுகின்ற நவீன அடிமைத்தனம்(**Modern**

Slavery) உதவிமைய இணைதளத்தில் காணலாம்.

மேலும் பயனுள்ள தகவல்களை Metropolitan Police இணையதளத்தில் காணலாம்.

## நவீன அடிமைத்தனம் (Modern Slavery) பற்றி நான் எப்படி புகாரளிப்பது?

உங்களுக்குத் தெரிந்த ஒருவர் நவீன அடிமைத்தனத்தால் (Modern Slavery) பாதிக்கப்பட்டிருப்பதாக நீங்கள் கருதினால், அதைப் பற்றிப் புகாரளிக்க நிறைய வழிகள் உள்ளன:

- ஆலோசனைக்கு நவீன அடிமைத்தனம் (Modern Slavery) உதவிமையத்தை 08000 121 700 என்ற எண்ணில் நீங்கள் அழைக்கலாம். நீங்கள் உங்கள் பெயரை அவர்களிடம் சொல்ல வேண்டியதில்லை. அது ஒரு நாளின் 24 மணி நேரமும், ஒரு ஆண்டின் 365 நாள்களிலும் செயல்படுகிறது. நீங்கள் உதவி அல்லது ஆலோசனை பெறுவதற்கான இதர வழிகள் பற்றிய கூடுதல் தகவல்களை

நவீன அடிமைத்தனம் **(Modern Slavery)** உதவிமைய இணையதளத்தில் காணலாம்:

- நவீன அடிமைத்தனம் **(Modern Slavery)** பற்றி மாநகர காவல்துறையில் 101 என்ற எண்ணில் அழைத்தோ அல்லது அவர்களுடையஆன்லைன் படிவத்தைப் பயன்படுத்தியோ நீங்கள் புகார் செய்யலாம்.

- அது புதிய பொருள்கள் உற்பத்தித் தொழில் தொடர்புடையதாக இருந்தால்,**Gangmasters and Labour Abuse Authority-ஐத் தொடர்புகொள்ளவும்.**

- அது ஒரு அவசரநிலையாக இருந்தாலோ அல்லது குற்றச்செயல் நடைபெறும் இடமாக இருந்தால் **999-ஐ அழைக்கவும்**.

- **0800 555 111** என்ற எண்ணில் Crimestoppers-ஐ அழைத்து நவீன அடிமைத்தனம் **(Modern Slavery)** பற்றி நீங்கள் அநாமதேயமாகவும் புகாரளிக்க முடியும்.

# தொழிற்சங்கத்தின் (Trade Union) ஒரு உறுப்பினராக இருத்தல்

## ஒரு தொழிற்சங்கத்தில்(Trade Union) சேர்வதற்கான உரிமை

நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தின்(Trade Union) உறுப்பினராக இருந்தாலோ அல்லது ஒரு தொழிற்சங்கத்தில் நீங்கள் சேர விரும்பினாலோ உங்கள் முதலாளி உங்களை மாறுபாடான முறையில் நடத்த முடியாது. நீங்கள் எந்த தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல.

ஒரு தொழிற்சங்கத்தில்(Trade Union) சேர்வதற்கான உரிமை பணியாளர்கள்(Employees) மற்றும் தொழிலாளிகளுக்கு(workers ) மட்டுமே உள்ளது.

## தொழிற்சங்கங்கள்(Trade Union) என்பவை யாவை?

தொழிற்சங்கம்(Trade Union) என்பது தொழிலாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு ஆகும், இது உங்கள் முதலாளி உங்களை நல்ல முறையில் நடத்த வழிவகுக்கிறது. நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தின்(Trade Union) உறுப்பினரானால், பணியிடத்தில் உங்களுக்கு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் அவர்கள் உதவுவார்கள். உங்களுக்கு ஏற்கனவே ஏதாவது பிரச்சனை இருந்தால் அவர்களால் உதவ முடியாது என்பதையும், நீங்கள் தொழிற்சங்கத்தில் சேர்ந்த பிறகு ஏற்பட்ட புதிய பிரச்சனைகளுக்கு மட்டுமே அவர்கள் உதவ முடியும் என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது முக்கியமாகும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பவராக இல்லையென்றால் தொழிற்சங்கத்தில் (Trade Union) சேர்வதற்கு நீங்கள் அதிகமாகப் பணம் செலுத்த வேண்டியதில்லை.

தொழிற்சங்கங்கள்(Trade Union) பற்றிய மேலும் அதிக பொதுவான தகவல்கள் **Trades Union Congress (TUC) இணையதளத்தில் கிடைக்கின்றன.**

நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தில்(**Trade Union**) சேர்வதற்கு மிகவும் ஆர்வமுள்ளவராக இருந்தால், சங்கத்தைத் தேடுவதற்கு **TUC-**இன் ஆன்லைன் கருவியைப் பயன்படுத்த முயற்சிக்கவும்.

## நான் தொழிற்சங்க உறுப்பினராக(Trade Union) இருப்பதால் நான் மாறுபாடான முறையில் நடத்தப்படுவதாகக் கருதுகிறேன்

ஒரு தொழிற்சங்கத்தில்(**Trade Union**) சேர்வதற்கான உங்கள் உரிமைகள் பற்றிய கூடுதல் தகவல்களை அரசாங்கத்தின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

## நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்படுவது பற்றிய வல்லுநர் ஆலோசனையை நான் எங்கு பெற முடியும்?

## தொலைபேசி வாயிலாக அல்லது மின்னஞ்சல் வாயிலாக

- பாகுபாடு (discrimination) அல்லது துன்புறுத்தல் (**harassment**) பற்றிய உதவி அல்லது ஆலோசனை பெற நீங்கள் விரும்பினால் Equality Advisory and Support

Service (EASS) -ஐ **0808 800 0082** என்ற எண்ணில் தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம் அல்லது **0808 800 0084** என்ற எண்ணுக்கு உரைச்செய்தி அனுப்பலாம்.

- நீங்கள் உதவித்தொகை பெறுபவராகவோ அல்லது குறைந்த வருமானம் கொண்டவராகவோ இருந்து, பாகுபாடு (discrimination) பற்றிய சேவைகளைப் பெற விரும்பினால் Community Legal Advice சேவையை **0345 345 4345 என்ற எண்ணில் அழைக்கலாம்.**

- நீங்களோ அல்லது உங்கள் வாழ்க்கைத் துணைவரோ ஒரு குழந்தையை வைத்திருப்பதன் காரணமாக அல்லது தத்தெடுத்திருப்பதன் காரணமாக நேர்மையின்றி நடத்தப்படுவதாக நீங்கள் கருதினால் Maternity Action -க்கு **0808 802 0029** என்ற எண்ணில் நீங்கள் அழைக்கலாம்.

- நீங்கள் மாற்றுத் திறனாளியாக இருந்து உங்கள் வேலை உரிமைகள் பற்றிய

ஆலோசனை பெற விரும்பினால் Disability Law Service (DLS)-ஐ **0207 791 9800** என்ற எண்ணில் நீங்கள் தொடர்புகொள்ளலாம் அல்லது **advice@dls.org.uk**-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

- தவறுகளை வெளிக்கொணர்பவர்களுக்கான (**whistleblowers**) பாதுகாப்பு பற்றி நீங்கள் ஆலோசனை பெற விரும்பினால், Protect அறக்கட்டளையை **020 3117 2520** என்ற எண்ணில் நீங்கள் தொலைபேசியில் அழைக்கலாம். நீங்கள் உங்கள் பெயரை அவர்களிடம் சொல்ல வேண்டியதில்லை. Protect பற்றிய கூடுதல் தகவல்களை, அவர்களை எவ்வாறு தொடர்புகொள்வது என்பது உட்பட, அவர்களின் இணையதளத்தில் நீங்கள் காணலாம்.

- நீங்கள் தொழிற்சங்கத்தின் உறுப்பினராக இருந்தால், ஆலோசனை பெற அவர்களை நீங்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.

- நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து பாலியல் துன்புறுத்தல் (sexual harassment) சட்டம் பற்றி ஆலோசனை பெற விரும்புகிறீர்கள் என்றால், பெண்களுக்கான உரிமைகள் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல்(sexual harassment) அமைப்பை **020 7490 0152** என்ற எண்ணில் தொடர்புகொண்டு இலவச சட்ட ஆலோசனை பெற முடியும்.

# ஊதியம் மற்றும் ஓய்வூதியம்

நீங்கள் செய்கின்ற வேலைக்கு உங்கள் முதலாளி சரியான ஊதியம் கொடுப்பதை உறுதிசெய்வதற்கும், உங்கள் ஓய்வுகாலத்திற்கு நீங்கள் சேமிக்க உதவுவதற்கும் எண்ணற்ற உரிமைகள் இருக்கின்றன.

இவற்றில் சில உரிமைகள் (ஒரு பணியாளர் **(Employees)** , அல்லது ஒரு தொழிலாளி **(workers )** போன்று) ஒரு குறிப்பிட்ட வேலை நிலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமாகும்.

## ஒரு மணிநேரத்திற்கு எனக்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்பட வேண்டும்?

### தேசிய குறைந்தபட்ச ஊதியம் (National Minimum Wage) மற்றும் தேசிய வாழ்க்கை ஊதியம் (National Living Wage)

வழக்கமாக நீங்கள் வேலை செய்யும் ஒவ்வொரு மணிநேரத்திற்கும் உங்கள்

முதலாளி ஒரு குறிப்பிட்ட தொகையை உங்களுக்கு ஊதியமாக கொடுத்தாக வேண்டும்.

உங்கள் வயது என்ன என்பதைப் பொறுத்து உங்கள் ஊதியமும் வேறுபடும். நீங்கள் 25 வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் அது **தேசிய குறைந்தபட்ச ஊதியம் (National Minimum Wage)** எனப்படுகிறது. நீங்கள் 25 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அது **தேசிய வாழ்க்கை ஊதியம் (National Living Wage)** எனப்படுகிறது.

இந்தத் தொகை அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுகிறது மற்றும் ஒவ்வொரு ஏப்ரல் மாதமும் அவர்கள் அதை மாற்றுகிறார்கள். தற்போதைய ஊதியங்களைப் பார்க்கவும்.

**தேசிய குறைந்தபட்ச ஊதியம் (National Minimum Wage)** மற்றும் **தேசிய வாழ்க்கை ஊதியம் (National Living Wage)** ஆகியவை **பணியாளர்கள் (Employees)** மற்றும் **தொழிலாளிகளுக்கு(workers )** மட்டுமே பொருந்தும்.

## நான் குறைந்தபட்ச அல்லது வாழ்க்கை ஊதியத்தை விடக் குறைவாகப் பெறுகிறேன் என்று நினைக்கிறேன்.

நீங்கள் சரியான ஊதியம் பெறுகிறீர்களா என்பதைச் சரிபார்க்க **My Pay London வலைத்தளத்தில்** சில சிறந்த ஆலோசனைகளும் பயனுள்ள கருவியும் கிடைக்கிறது. இந்த வலைத்தளம் Legal Action Group என்ற அறக்கட்டளையால் இயக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு இண்டர்ன்ஷிப் செய்பவராக இருந்தால், உங்களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்படும் என்பது உங்கள் வேலை நிலையைச் சார்ந்திருக்கும். நீங்கள் உள்ளுறைவாளராக இருந்தால் உங்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி அரசாங்கத்தின் வலைத்தளத்தில் பயனுள்ள தகவலை நீங்கள் பெறலாம்.

## நீங்கள் பெறும் ஊதியம் சரியான தொகை தான் என்பதை உறுதிசெய்தல்

## சட்டவிரோத பிடித்தங்கள்

உங்கள் முதலாளி உங்கள் ஊதியத்திலிருந்து வரிகள் அல்லது நீங்கள் வேலையைத் தொடங்கியபோது நீங்கள் ஒப்புக்கொண்ட செலவுகள் ஆகியவற்றுக்கு மட்டுமே பணம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை உங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் (நீங்கள் ஒப்பந்தம் என்ற ஒன்றை போட்டிருந்தால்)

வேறு ஏதாவது காரணத்திற்காக அவர்கள் பணம் பிடித்தாலோ அல்லது அவர்கள் உங்களுக்கு ஊதியமே தரவில்லை என்றாலோ, அவர்கள் சட்டத்தை மீறியவர்களாகிறார்கள்.

இது **சட்டவிரோத பிடித்தங்கள் (unlawful deductions) எனப்படுகிறது.**

சட்டவிரோத பிடித்தங்களிலிருந்து (**unlawful deductions**) உங்களைப் பாதுகாப்பதற்கான உரிமைகள் **பணியாளர்கள்(Employees)** மற்றும் **தொழிலாளிகளுக்கு(workers )** மட்டுமே பொருந்தும்.

### சட்டவிரோத பிடித்தங்களால்(unlawful deductions) எனக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

உங்கள் முதலாளி உங்கள் ஊதியத்தில் எதைப் பிடிக்கலாம் அல்லது பிடிக்கக்கூடாது என்பதைப் பற்றிய கூடுதல் தகவல் அரசாங்க வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கு சரியான தொகை ஊதியமாக வழங்கப்படுகிறதா என்பதைப் பரிசோதிப்பதற்கு **My Pay London** வலைத்தளத்தில் சில சிறந்த ஆலோசனைகள் மற்றும் ஒரு பயனுள்ள கருவி உள்ளது. இந்த வலைத்தளம் Legal Action Group என்ற அறக்கட்டளையால் இயக்கப்படுகிறது.

## உங்கள் ஊதியம் பற்றிய எழுத்துப்பூர்வ தகவல்களைப் பெறுவதற்கான உரிமை

### வகைப்படுத்தப்பட்ட ஊதியச் சீட்டுகள் மற்றும் அறிக்கைகள்

நீங்கள் கேட்டுக்கொண்டால், கடந்த முறை நீங்கள் ஊதியம் வாங்கிய பிறகு நீங்கள்

எவ்வளவு சம்பாதித்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் முதலாளி எழுதித் தர வேண்டும்.

மேலும், வரி போன்றவற்றுக்காக உங்கள் ஊதியத்தில் எவ்வளவு தொகையை அவர்கள் பிடித்தம் செய்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எழுதித் தர வேண்டும்.

இது **வகைப்படுத்தப்பட்ட ஊதியச் சீட்டு (Itemised Payslip)** அல்லது **வகைப்படுத்தப்பட்ட ஊதிய அறிக்கை (Itemised Pay Statement) எனப்படுகிறது.**

ஏப்ரல் 2019-லிருந்து, உங்களுக்கு வேறுபட்ட ஊதியம் வழங்கப்படும் இடங்களில், உதாரணமாக மிகைநேரம் வேலை செய்ததற்காக உங்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்படும்போது, ஊதியச் சீட்டுகளில்(**Itemised Payslip**) நீங்கள் எத்தனை மணிநேரம் வேலை செய்திருக்கிறீர்கள் என்ற தகவலும் சேர்க்கப்படுகிறது.

உங்கள் ஊதியம் பற்றிய எழுத்துப்பூர்வ தகவல்களைப் பெறும்

உரிமைபணியாளர்கள்(Employees) மற்றும் தொழிலாளிகளுக்கு(workers ) மட்டுமே பொருந்தும்.

### வகைப்படுத்தப்பட்ட ஊதியச் சீட்டுகளில் எனக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது

ஊதியச் சீட்டுகள் (Itemised Payslip) பற்றியும் அவற்றில் என்ன விவரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் கூடுதல் தகவல்கள் அரசாங்கத்தின் வலைத்தளத்தில் இடம்பெற்றுள்ளன.

## ஓய்வுகாலச் செலவு பற்றிய உதவி

### பணியிட ஓய்வூதியம்

உங்களுக்கு வயதான பிறகு நீங்கள் வேலைக்குச் செல்ல முடியாதபோது உங்கள் வாழ்க்கைச் செலவுக்குப் பணம் வழங்குவதற்காக ஒவ்வொரு முறையும் நீங்கள் பெறும் ஊதியத்திலிருந்து உங்கள் முதலாளி ஒரு குறிப்பிட்ட தொகையைச் சேமித்து வைப்பார். இது பணியிட ஓய்வூதியம் (Workplace pensions) எனப்படுகிறது.

வழக்கமாக உங்களுக்கு ஊதியம் வழங்கும் ஒவ்வொரு முறையும் உங்கள் முதலாளியும் உங்கள் ஓய்வூதியத்திற்காக சிறிது கூடுதல் தொகையை அளிக்க வேண்டியிருக்கிறது.

வேண்டாம் என்று நீங்கள் சொல்லாவிட்டால் தவிர, வழக்கமாக அவர்கள் உங்களுக்கு பணியிட ஓய்வூதியம் கொடுக்க வேண்டியிருக்கும். இது **தானியங்கி சேர்க்கை (automatic enrolment) எனப்படுகிறது.**

பணியிட ஓய்வூதியம் **பணியாளர்கள்** மற்றும் **தொழிலாளிகளுக்கு** ம ட்டுமே பொருந்தும்.

## பணியிட ஓய்வூதியம் சார்பாக எனக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது.

பணியிட ஓய்வூதியம் பற்றி அரசாங்க வலைத்தளத்தில் நிறைய நல்ல பொதுவான தகவல்கள் இருக்கின்றன.

பணியிட ஓய்வூதியம் பற்றி உங்களுக்கு பிரச்சனை இருக்கிறது என்று நீங்கள் கருதினால், நீங்கள் என்ன செய்யவேண்டும் மற்றும் யாரிடம் சொல்லவேண்டும் என்பதைப் பற்றி ஓய்வூதியக் கட்டுப்பாட்டாளர் வலைத்தளத்தில் சில சிறந்த ஆலோசனைகள் இருக்கின்றன. நீங்கள் உங்கள் முதலாளியிடமும் புகார் செய்யலாம்.

## ஊதியம் மற்றும் ஓய்வூதியம் பற்றி வல்லுநர் ஆலோசனையை நான் எங்கு பெற முடியும்?

## தொலைபேசி வாயிலாக அல்லது மின்னஞ்சல் வாயிலாக

- பணியிட ஓய்வூதியங்கள் பற்றிய பொதுவான கேள்விகளுக்கு அரசாங்கத்தின் பணியிட ஓய்வூதியத் தகவல் இணைப்பை **0800 731 0372** என்ற எண்ணில் நீங்கள் அழைக்கலாம். இது திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். தொலைபேசியில் நீங்கள் கேட்கவோ அல்லது பேசவோ முடியவில்லை என்றால் NGT டெக்ஸ்ட் ரிலே-க்கு நீங்கள்

**18001** பின்னர் **0800 731 0372** ஐ அழைக்கலாம். டெக்ஸ்ட்ஃபோன் எண் **0800 731 0392** ஆகும்.

- தானியங்கி சேர்க்கையில் உங்களுக்கு ஏதாவது பிரச்சனை இருந்தால் அல்லது பணியிட ஓய்வூதியங்கள் பற்றி உங்களுக்கு ஆலோசனை தேவைப்பட்டால் Pensions Advisory Service-ஐ **0800 011 3797**என்ற எண்ணில் நீங்கள் அழைக்கலாம். இது திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்படும். நீங்கள் அவர்களைத் தொடர்புகொள்ள, வெப்சாட் அல்லது தபால் போன்ற வேறு எந்த வழிகளைப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்கள் அவர்களுடைய வலைத்தளத்தில் இடம்பெற்றுள்ளன.

- பணியிட ஓய்வூதியம் பெறுவதைத் தேர்ந்தெடுப்பதா வேண்டாமா என்பதைப் பற்றிய தகவல் அல்லது ஆலோசனையை நீங்கள் பெற விரும்பினால், **Money Advice Service** வலைத்தளத்தில் அதைப் பற்றிய நிறைய நல்ல தகவல்கள் இருக்கின்றன.

இது ஆலோசனைக் கருவி மற்றும் கணிப்பானை உள்ளடக்குகிறது

# உங்கள் வேலையை இழத்தல்

உங்கள் முதலாளி உங்களை வேலைநீக்கம் செய்யும்போது அல்லது மிகைமை ஊழியராகப் பட்டியலிடும்போது உங்களைப் பாதுகாப்பதற்கு பல உரிமைகள் உள்ளன.

இந்த உரிமைகளில் சில குறிப்பிட்ட வேலை நிலைமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமாகும் (ஒரு பணியாளர், அல்லது ஒரு தொழிலாளி போன்று).

## நியாயமற்ற முறையில் வேலையிலிருந்து நீக்கப்படுதல் அல்லது வேலையை விட்டுவிடுமாறு கட்டாயப்படுத்தப்படுதல்

### நியாயமற்ற வேலைநீக்கத்திலிருந்து பாதுகாப்பு

உங்கள் முதலாளி உங்களை வேலையிலிருந்து நீக்கினால் அல்லது உங்களை பதவியிலிருந்து விலக்கினால், ஏற்புடைய காரணத்தை அவர் தெரிவிக்க

வேண்டும். இல்லையென்றால் அவர்கள் சட்டத்தை மீறியவர்கள் ஆவார்கள்.

இது **நியாயமற்ற வேலைநீக்கம் (unfair dismissal)** எனப்படுகிறது.

மேலும், உங்களுக்கு விருப்பமில்லாதபோது வேலையை விட்டுச் செல்லுமாறு உங்களைக் கட்டாயப்படுத்தும் அளவுக்கு மிக மோசமாக அவர்கள் உங்களை நடத்த முடியாது.

இது **கொள்நிலை வேலைநீக்கம் (constructive dismissal)** எனப்படுகிறது, இது ஒருவகையான நியாயமற்ற வேலைநீக்கம் ஆகும்.

நியாயமற்ற வேலைநீக்கத்திலிருந்து பாதுகாப்பு என்பது **பணியாளர்களுக்கு** மட்டுமே பொருந்தும்.

## நான் நியாயமற்ற முறையில் வேலைநீக்கம்(unfair dismissal) செய்யப்பட்டிருக்கலாம் என நினைக்கிறேன்.

நீங்கள் நியாயமற்ற முறையில் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறீர்களா என்பதை Citizens Advice வலைத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள படிநிலைகளைப் பின்பற்றி சரிபார்த்துக் கொள்ளலாம்.

## நீங்கள் மிகைமை ஊழியராகப் பட்டியலிடப்பட்டால் நீங்கள் பெறக்கூடிய கூடுதல் பணம்

### சட்டரீதியான மிகைமை ஊதியம் (Statutory Redundancy Pay)

சில நேரங்களில் உங்கள் முதலாளி அவருக்குக் கீழ் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருந்தால் உங்களை வேலையிலிருந்து நீக்கலாம்.

இது மிகைமையாக்குதல் (being made redundant) எனப்படுகிறது.

இந்த நிலை உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் எவ்வளவு காலம் உங்கள் முதலாளியிடம் வேலை செய்திருக்கிறீர்கள் என்பதைப்

பொறுத்து அவர் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்க வேண்டும்.

இது **சட்டரீதியான மிகைமை ஊதியம் (Statutory Redundancy Pay) (SRP) எனப்படுகிறது.**

சட்டரீதியான மிகைமை ஊதியம் (**Statutory Redundancy Pay**) **பணியாளர்களுக்கு(workers )** மட்டுமே பொருந்தும். நீங்கள் உங்கள் முதலாளியிடம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்திருந்தால் மட்டுமே இது பொருந்தும்.

**என்னுடைய மிகைமை ஊதியத்தில் எனக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது என நான் நினைக்கிறேன்**

மிகைமை ஊதியம் தொடர்பான மிகவும் பொதுவான தகவல்கள் அரசாங்கத்தின் வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

நீங்கள் மிகைமை ஊழியராக அறிவிக்கப்பட்டு எவ்வளவு பணம் உங்களுக்குக் கிடைக்கும் என நீங்கள் தெரிந்துக்கொள்ள விரும்பினால், அரசாங்கத்தின் மிகைமை ஊதிய

கணக்கீட்டுக் கருவியை நீங்கள் பயன்படுத்த முயற்சிக்கலாம்.

## உங்களை வேலைநீக்கம் செய்த பிறகு மிகைமை ஊழியராகப் பட்டியலிட்ட பிறகு நீங்கள் எவ்வளவு காலம் வேலையில் தொடரலாம்

### சட்டரீதியான அறிவிப்புக் காலங்கள் (Statutory Notice Periods) மற்றும் சட்டரீதியான மிகைமை அறிவிப்பு (Statutory Redundancy Notice)

உங்கள் முதலாளி உங்களை வேலைநீக்கம் செய்துவிட்டால் அல்லது தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்திவிட்டால், நீங்கள் பணியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன் அவர்கள் உங்களுக்கு குறிப்பிட்ட அளவு நேரம் கொடுக்க வேண்டும்.

நீங்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டால் இது **சட்டரீதியான அறிவிப்புக் காலம் (Statutory Notice Periods)** என, அல்லது நீங்கள் மிகைமை ஊழியராகப் பட்டியலிடப்பட்டால் இது **சட்டரீதியான மிகைமை அறிவிப்பு (Statutory Redundancy Notice)** என அழைக்கப்படுகிறது.

உங்களுடைய அறிவிப்புக் காலம் எவ்வளவு என்பது நீங்கள் எவ்வளவு காலம் பணிபுரிந்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததாகும்.

நீங்கள் ஒப்பந்தம் செய்திருந்தால் நீங்கள் வேறு அறிவிப்புக் காலத்துக்கு ஒப்புக்கொண்டிருக்கலாம். இது **ஒப்பந்த அறிவிப்புக் காலம் (Contractual Notice Period) எனப்படுகிறது.**

நீங்கள் உண்மையிலேயே மிக மோசமான ஒரு செயலில் ஈடுபட்டதற்காக வேலைநீக்கம் செய்யப்பட்டால் நீங்கள் உடனே வேலையிலிருந்து வெளியேற வேண்டியிருக்கும். இது **மொத்த தவறான நடத்தை (gross misconduct)** எனப்படுகிறது.

அறிவிப்புக் காலங்கள் பற்றிய உரிமைகள் **பணியாளர்களுக்கு** மட்டுமே பொருந்தும்.

## என்னுடைய அறிவிப்புக் காலத்திலும் எனக்கு ஊதியம் கிடைக்குமா?

வழக்கமாக உங்கள் முதலாளி உங்கள் அறிவிப்புக் காலத்தின்போது உங்கள் முழு ஊதியத்தையும் உங்களுக்குத் தொடர்ந்து வழங்குவார்.

சில நேரங்களில் உடனே வேலையை விட்டுச் செல்லுமாறு அவர்கள் உங்களைக் கேட்டுக்கொள்ளலாம், ஆனால் உங்கள் அறிவிப்புக் காலத்தில் நீங்கள் பெற வேண்டிய ஊதியத்தை அவர்கள் முழுமையாகக் கொடுத்துவிடுவார்கள்.

இது அறிவிப்புக்கு மாற்றான ஊதியம் எனப்படுகிறது.

**எனது அறிவிப்புக் காலம் அல்லது ஊதியத்தில் பிரச்சனை இருப்பதாக நான் நினைக்கிறேன்.**

அறிவிப்புக் காலம் மற்றும் ஊதியம் பற்றிய மிக விரிவான தகவல்கள் Citizens Advice வலைத்தளத்தில் உள்ளன.

சரியான அறிவிப்புக் காலம் மற்றும் ஊதியம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை MyPay London வலைத்தளத்தில் உள்ள இந்தக்

கருவியைப் பயன்படுத்தி நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.

## நீங்கள் பணிபுரியும் நிறுவனம் கையகப்படுத்தப்படும்போது பாதுகாப்பு

### TUPE (பொறுப்பேற்பு பணிமாறுதல் (வேலைப் பாதுகாப்பு))

நீங்கள் பணிபுரியும் நிறுவனம் வேறொருவரால் கையகப்படுத்தப்படும்போது, வழக்கமாக நீங்கள் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் உங்கள் வேலையைத் தொடர வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால் புதிய முதலாளிகள் சட்டத்தை மீறக்கூடும்.

பொறுப்பேற்பு பணிமாறுதல் (வேலைப் பாதுகாப்பு) அல்லது சுருக்கமாக **TUPE (Transfer of Undertakings (Protection of Employment))** என அழைக்கப்படும் சட்டத்தின் கீழ் நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள்.

நீங்கள் TUPE-ஆல் எப்போது பாதுகாக்கப்படுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்வது சிரமமானதாக இருக்கலாம்.

உதாரணமாக, நிறுவனத்தில் பணம் இல்லையென்றால் உங்கள் நிறுவனத்தின் புதிய முதலாளிகள் உங்களை மிகைமை நபராக அறிவிக்கலாம் அல்லது தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தலாம்.

நீங்கள் என்ன வகையான வேலை செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்கள் ஓய்வூதியத்திற்கு (அவ்வாறு ஒன்றை நீங்கள் பெற்றிருந்தால்) என்ன நிகழ்கிறது என்பதைப் பற்றியும் வேறு விதிகள் உள்ளன.

TUPE-இன் கீழ் பாதுகாப்பு என்பது பணியாளர்களுக்கு மட்டும் பொருந்தும்.

**TUPE-இன் கீழ் எனக்கு உள்ள உரிமைகள் மீது எனக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது என நான் நினைக்கிறேன்.**

நீங்கள் பணிபுரியும் நிறுவனம் கையகப்படுத்தப்படும்போது உங்கள் உரிமைகள் என்ன என்பது பற்றி Worksmart வலைத்தளத்தில் சில நல்ல தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

## குடும்பங்கள் மற்றும் பெற்றோர்கள்

நீங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணைவர் ஒரு குழந்தையை வைத்திருக்கும்போது, அல்லது தத்தெடுக்கும்போது உங்களைப் பாதுகாப்பதற்கு எண்ணற்ற உரிமைகள் உள்ளன.

இவற்றில் சில உரிமைகள் (ஒரு பணியாளர், அல்லது ஒரு தொழிலாளி போன்று) ஒரு குறிப்பிட்ட வேலை நிலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமாகும்.

## உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கும்போது ஓய்வு நேரம் அல்லது ஊதியம்

### மகப்பேறு விடுப்பு மற்றும் மகப்பேறு ஊதியம்

உங்களுக்கு ஒரு குழந்தை இருந்தால், உங்கள் முதலாளி உங்களுக்குக் குறிப்பிட்ட அளவு ஓய்வு நேரம் அனுமதிக்க வேண்டும். இது சட்டரீதியான மகப்பேறு விடுப்பு Statutory Maternity Leave) என அழைக்கப்படுகிறது.

நீங்கள் பணிக்கு வராத நாள்களில் அவர்கள் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பணம் தொடர்ந்து வழங்க வேண்டும். இது **சட்டரீதியான மகப்பேறு ஊதியம் (Statutory Maternity Pay)** எனப்படுகிறது.

சட்டரீதியான மகப்பேறு விடுப்பு **பணியாளர்களுக்கு** மட்டுமே பொருந்தும்.

சட்டரீதியான மகப்பேறு ஊதியமானது **அனைத்துப் பணியாளர்களுக்கும்** மற்றும் ஒரு குறிப்பிட்ட காலம் பணிபுரிந்து குறிப்பிட்ட அளவு பணம் சம்பாதித்துள்ள **சில தொழிலாளிகளுக்கும்** பொருந்தும்.

நீங்கள் மகப்பேறு ஊதியம் பெற முடியவில்லை என்றால், மகப்பேறு படி போன்ற பிற நிதியாதரவை அரசாங்கத்திடமிருந்து நீங்கள் பெற முடியும்.

அரசாங்கம் அதன் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களை அளித்துள்ளது.

உங்களுக்கு உரிமையுள்ளது எது என்பதைக் கணக்கிடுவதற்கான ஒரு பயனுள்ள கருவியையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்..

# உங்கள் மனைவி ஒரு குழந்தையை வைத்திருக்கும்போது ஓய்வுநேரம் மற்றும் ஊதியம்

## தந்தைமை விடுப்பு மற்றும் ஊதியம்

உங்கள் மனைவிக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால் அல்லது நீங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு குழந்தையைத் தத்தெடுத்தால், உங்கள் முதலாளி உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஓய்வுநேரம் அனுமதிக்க வேண்டும். இது **சட்டரீதியான தந்தைமை விடுப்பு (Statutory Paternity Leave)** எனப்படுகிறது.

நீங்கள் பணிக்கு வராத நாள்களில் அவர்கள் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பணம் தொடர்ந்து வழங்க வேண்டும். இது **சட்டரீதியான தந்தைமை ஊதியம் (Statutory Paternity Pay)** எனப்படுகிறது.

உங்கள் மனைவி கர்ப்பமாக இருக்கும்போது பரிசோதனைக்குச் செல்லும்போது அவருடன் துணைக்குச் செல்வதற்காக ஊதியமில்லா விடுப்பு கூட நீங்கள் எடுக்க முடியும்.

சட்டரீதியான தந்தைமை விடுப்பு பணியாளர்களுக்கு (employees) மட்டுமே பொருந்தும்.

சட்டரீதியான தந்தைமை விடுப்பானது அனைத்துப் பணியாளர்களுக்கும் மற்றும் ஒரு குறிப்பிட்ட காலம் பணிபுரிந்து குறிப்பிட்ட அளவு பணம் சம்பாதித்துள்ள சில தொழிலாளிகளுக்கும் பொருந்தும்.

அரசாங்கம் அதன் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களை அளித்துள்ளது.

உங்களுக்கு உரிமையுள்ளது எது என்பதைக் கணக்கிடுவதற்கான ஒரு பயனுள்ள கருவியையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்..

## உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கும்போது ஓய்வுநேரத்தையும்

# ஊதியத்தையும் உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் பகிர்ந்துகொள்ளுதல்

## பகிரப்பட்ட தந்தைமை விடுப்பு மற்றும் பகிரப்பட்ட தந்தைமை ஊதியம்

உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் ஒரு குழந்தை பிறந்திருந்தால் அல்லது நீங்கள் தத்தெடுத்திருந்தால் ஒரு குறிப்பிட்ட அளவு ஓய்வுநேரத்தை நீங்கள் பகிர்ந்துகொள்ள முடியும். இது **பகிரப்பட்ட பெற்றோர் விடுப்பு (Shared Parental Leave)** எனப்படுகிறது.

நீங்கள் விடுமுறையில் இருக்கும்போது உங்கள் முதலாளி ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை உங்களுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும். இது **பகிரப்பட்ட பெற்றோர் ஊதியம் (Shared Parental Pay)** எனப்படுகிறது.

பகிரப்பட்ட பெற்றோர் விடுப்ப **சில பணியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது** மற்றும் பகிரப்பட்ட பெற்றோர் ஊதியம் **சில பணியாளர்களுக்கும் சில தொழிலாளிகளுக்கும் மட்டுமே வழங்கப்படுகிறது.**

நீங்கள் எவ்வளவு பகிரப்பட்ட பெற்றோர் விடுப்பு அல்லது ஊதியம் பெற முடியும் என்பதைக் கணக்கிடுவது சிரமமானதாக இருக்கலாம், ஏனெனில் இது உங்கள் மனைவியின் வேலை நிலையையும் நீங்கள் இருவரும் சேர்ந்து எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பதையும் சார்ந்ததாகும்.

அரசாங்கம் தனது வலைத்தளத்தில் விரிவான தகவல்களை அளித்துள்ளது.

நீங்கள் எவ்வளவு தொகை பெறுவதற்கான உரிமையைப் பெற்றுள்ளீர்கள் எனக் கணக்கிடுவதற்கு அவர்களிடம் ஒரு பயனுள்ள கருவியும் இருக்கிறது.

## நீங்களும் உங்கள் மனைவியும் ஒரு குழந்தையைத் தத்தெடுத்திருந்தால் ஓய்வுநேரம் மற்றும் ஊதியம்

### சட்டரீதியான தத்தெடுப்பு ஊதியம் மற்றும் சட்டரீதியான தத்தெடுப்பு விடுப்பு

நீங்களோ, அல்லது நீங்களும் உங்கள் மனைவியுமோ ஒரு குழந்தையைத்

தத்தெடுத்திருந்தால் நீங்கள் வேலையிலிருந்து சிறிது ஓய்வுநேரம் பெறலாம். இது **சட்டரீதியான தத்தெடுப்பு விடுப்பு (Statutory Adoption Leave)** எனப்படுகிறது.

நீங்கள் விடுமுறையில் இருந்தாலும் கூட உங்கள் முதலாளி ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை உங்களுக்குத் தொடர்ந்து ஊதியமாகத் தர வேண்டும். இது **சட்டரீதியான தத்தெடுப்பு ஊதியம் (Statutory Adoption Pay)** எனப்படுகிறது.

உங்களில் ஒருவர் மட்டுமே தத்தெடுப்பு விடுப்பு அல்லது ஊதியம் கோர முடியும், ஆனால் மற்றொரு துணைவர் தந்தைமை விடுப்பு அல்லது ஊதியம் கோரிப் பெற்றுக்கொள்ளலாம்.

பகிரப்பட்ட பெற்றோர் விடுப்பு அல்லது ஊதியத்தையும் நீங்கள் கோரிப் பெற்றுக்கொள்ளலாம்.

சட்டரீதியான தத்தெடுப்பு விடுப்பு பணியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

சட்டரீதியான தத்தெடுப்பு ஊதியம் பணியாளர்களுக்கும் மற்றும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பணிபுரிந்து ஒரு குறிப்பிட்ட அளவு பணம் சம்பாதித்துள்ள தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

அரசாங்கம் தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களைக் கொண்டிருக்கிறது.

உங்கள் தத்தெடுப்பு விடுப்புக்குத் திட்டமிட உதவுவதற்கு ஒரு பயனுள்ள கருவியும் அவர்களிடம் உள்ளது.

## ஒரு பெற்றோராக எனது உரிமைகள் பற்றிய வல்லுநர் ஆலோசனையை நான் எங்கு பெற முடியும்?

- Maternity Action என்பது பணியிடத்தில் தாய்மை மற்றும் தந்தைமை பற்றிய இலவச ஆலோசனையும், பலன்களும் வழங்குகின்ற ஒரு தேசிய அறக்கட்டளை ஆகும். கூடுதல் தகவல்களை அறிந்துகொள்ள நீங்கள் அவர்களுடைய வலைத்தளத்தைப் பார்வையிடலாம் அல்லது **0808 802 0057** என்ற எண்ணில்

அவர்களுடைய இலண்டன் பேறுகால உரிமைகள் ஆலோசனை இணைப்பைத் தொடர்புகொள்ளலாம். இது திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணியிலிருந்து மதியம் 1 மணி வரை செயல்படுகிறது.

## வேலையில் ஓய்வுநேரம்

உங்கள் முதலாளி உங்களுக்கு குறிப்பிட்ட அளவு ஓய்வுநேரம் வழங்க எண்ணற்ற உரிமைகள் உள்ளன.

இவற்றில் சில உரிமைகள் (ஒரு பணியாளர், அல்லது ஒரு தொழிலாளி போன்று) ஒரு குறிப்பிட்ட வேலை நிலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும்

என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமாகும்.

## நீங்கள் வேலைக்குச் செல்ல முடியாத அளவுக்கு உடல்நலமில்லாமல் இருக்கும்போது ஓய்வுநேரம் மற்றும் ஊதியம்

### சட்டரீதியான மருத்துவ ஊதியம் (Statutory Sick Pay)

உங்களுக்கு நோய் அல்லது சுகவீனம் ஏற்பட்டதன் காரணமாக அதிகமான நாள்கள் விடுமுறை எடுக்க வேண்டியிருந்தால், உங்கள் முதலாளி ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை ஊதியமாக வழங்க வேண்டும்.

இது **சட்டரீதியான மருத்துவ ஊதியம் (Statutory Sick Pay) எனப்படுகிறது**.

அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு காலத்திற்கு மட்டுமே உங்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கும், ஆனால் நீங்கள் அதற்கு ஒப்பந்தம் செய்திருந்தால் அதிகமாகவோ

அல்லது நீண்ட காலத்திற்கோ ஊதியம் பெற முடியும்.

சட்டரீதியான மருத்துவ ஊதியம் என்பது பணியாளர்கள் மற்றும் தொழிலாளிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

நீங்கள் மருத்துவ ஊதியம் பெறுவதற்குத் தகுதியுடையவரா என்பதை Citizens Advice வலைத்தளத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

## எனக்கு மருத்துவ விடுப்பு அல்லது ஊதியத்தில் ஒரு பிரச்சனை இருப்பதாக நான் நினைக்கிறேன்

நீங்கள் சரியான மருத்துவ ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா என்பதை MyPay London வலைத்தளத்தில் உள்ள இந்தக் கருவியைப் பயன்படுத்தி நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.

# ஓய்வுநேரம் துய்த்தல் மற்றும் விடுமுறை ஊதியம்

## வருடாந்திர விடுப்பு அல்லது சட்டரீதியான விடுப்பு உரிமை (Annual Leave or Statutory Leave Entitlement)

உங்கள் முதலாளி உங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாள்களுக்கு விடுப்பு அளிக்க வேண்டும், மற்றும் அவர்கள் உங்கள் வழக்கமான ஊதியத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டும்.

இது வருடாந்திர விடுப்பு (AnnualLeave) அல்லது சட்டரீதியான விடுப்பு உரிமை (Statutory Leave Entitlement) (சில நேரங்களில் விடுமுறை உரிமை எனப்படுகிறது (Holiday Entitlement)).

சட்டரீதியான விடுப்பு உரிமையானது பணியாளர்கள் மற்றும் தொழிலாளிகளுக்கு மட்டும் பொருந்தும்.

விடுமுறை உரிமை மற்றும் ஊதியம் பற்றி அரசாங்கம் தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களைக் கொண்டிருக்கிறது.

**என்னுடைய வருடாந்திர விடுப்பு அல்லது விடுமுறை ஊதியத்தில் எனக்கு ஒரு பிரச்சனை இருப்பதாக நினைக்கிறேன்.**

MyPay London வலைத்தளத்தில் உள்ள இந்தக் கருவியைப் பயன்படுத்தி. நீங்கள் போதுமான விடுமுறை ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா என்பதை நீங்கள் சரிபார்த்துக்கொள்ளலாம்

## ஒரு அவசரநிலை ஏற்பட்டால் நீங்கள் எவ்வளவு நாள் விடுமுறை எடுக்கலாம்

### அவசரகாலங்களுக்கான ஓய்வுநேரம் (**Time off for emergencies**)

உங்களுக்கோ உங்களைச் சார்ந்திருப்பவர்களுக்கோ (உங்கள் குடும்பத்தினர் அல்லது நீங்கள் கவனித்துக்கொள்ளும் யாராவது ஒருவர்) வரும் அவசரநிலைகளைக் கையாளுவதற்கு உங்கள் முதலாளி உங்களுக்கு ஓய்வுநேரம் அனுமதிக்க வேண்டும்.

இது அவசரகாலங்களுக்கான ஓய்வுநேரம்(**Time off for emergencies**) அல்லது சார்ந்திருப்பவர்களுக்கான ஓய்வுநேரம் **(time off for dependents)** எனப்படுகிறது.

நீங்கள் விடுமுறை எடுத்திருந்தாலும் கூட உங்கள் முதலாளி உங்களுக்கு தொடர்ந்து ஊதியம் வழங்கலாம், ஆனால் அவர்கள் கட்டாயம் அதைச் செய்யவேண்டும் என்பதில்லை.

அவசரநிலைகளுக்கான ஓய்வுநேரம் அனுபவிப்பதற்கான உரிமை பணியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

அரசாங்கம் அவசரகாலங்களுக்கான ஓய்வுநேரம் பற்றி தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களை அளித்துள்ளது .

# உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் ஊதியமில்லா விடுமுறை

## ஊதியமில்லா பெற்றோர் கடமைக்கான விடுமுறை (Unpaid parental leave)

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அவர்களைக் கவனித்துக்கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஊதியமில்லா விடுப்பு எடுக்க உங்கள் முதலாளி உங்களை அனுமதிக்க வேண்டும்.

உங்கள் ஒவ்வொரு குழந்தையும் 18 வயது அடையும் வரை அவர்களுக்காக நீங்கள் விடுப்பு எடுக்க முடியும், ஆனால் ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் எவ்வளவு நாள்கள் எடுக்க முடியும் என்பதற்கான வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊதியமில்லா பெற்றோர் கடமைக்கான விடுமுறை(Unpaid parental leave) பணியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும். ஊதியமில்லா பெற்றோர் கடமைக்கான விடுமுறை (Unpaid parental leave)பற்றி

அரசாங்கம் தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களை அளித்துள்ளது .

## வேலை நேரங்கள் மற்றும் நிபந்தனைகள்

நீங்கள் பணியிடத்தில் பாதுகாப்பாக இருப்பதையும், ஒரு ஆரோக்கியமான வேலை-வாழ்க்கை சமநிலையைப்

பெற்றிருப்பதையும் உறுதிசெய்வதற்கு எண்ணற்ற உரிமைகள் உள்ளன.

இவற்றில் சில உரிமைகள் (ஒரு பணியாளர், அல்லது ஒரு தொழிலாளி போன்று) ஒரு குறிப்பிட்ட வேலை நிலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமாகும்.

## வேலையின் போது போதுமான இடைவேளைகள் எடுத்துக்கொள்ளுதல்

## ஓய்வு இடைவேளைகள்

நீங்கள் வேலை செய்யும்போது நீங்கள் இடைவேளை எடுத்துக்கொள்ள உங்கள் முதலாளி உங்களுக்கு அனுமதி அளிக்கவேண்டும்.

மேலும், நீங்கள் வேலை செய்யும் நாள்களுக்கு இடையிலும் நீங்கள் வேலை செய்யும் வாரங்களுக்கு இடையிலும் போதுமான ஓய்வு எடுத்துக்கொள்ளவும்

அவர்கள் உங்களுக்கு அனுமதி அளிக்கவேண்டும்.

இவை வேலையில் ஓய்வு இடைவேளைகள் **(rest breaks at work)**, தினசரி ஓய்வு **(daily rest)** மற்றும் வாராந்திர ஓய்வு **(weekly rest)** என அழைக்கப்படுகின்றன.

ஓய்வு இடைவேளைகள் தொடர்பான உரிமைகள்பணியாளர்கள் மற்றும் தொழிலாளி களுக்கு மட்டுமே பொருந்தும்.

உங்கள் வயது என்ன மற்றும் நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்து விதிகள் வேறுபடலாம்.

அரசாங்கம் அதன் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களை அளித்துள்ளது.

## பணியிடத்தில் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருத்தல்

### உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

உங்கள் ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கின்ற எதையும் உங்கள் முதலாளி உங்களைச் செய்யவிடக் கூடாது. நீங்கள் பணிபுரியும் இடம் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய அவர்கள் உங்களுடனும் உங்களுடன் வேலை செய்யும் மற்றவர்களுடனும் பேச வேண்டும்.

இது பணியிடத்தில் உடல்நலமும் பாதுகாப்பும் **(health and safety at work)** எனப்படுகிறது. உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உரிமைகள் பணியாளர்கள் மற்றும் தொழிலாளிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

நீங்கள் சுயதொழில் செய்பவராக இருந்தாலும் நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் மற்றும் நீங்கள் எங்கு பணிபுரிகிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

Health and Safety Executive (HSE) தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களை அளித்துள்ளது.

## உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒரு பிரச்சனை பற்றி நான் எப்படி புகாரளிக்க முடியும்?

உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒரு பிரச்சனையை உங்களால் சுயமாக கையாள முடியவில்லை எனில், நீங்கள் உங்கள் முதலாளியிடம் புகார் செய்யலாம்.

நீங்கள் யாரிடம் சொல்ல வேண்டும் என்பது நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் மற்றும் எங்கே வேலை செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததாகும்.

ஒரு பிரச்சனை பற்றி நீங்கள் யாரிடம் புகாரளிக்க வேண்டும் என்பதை Health and Safety Executive வலைத்தளத்தில் காணலாம்.

## பணியிடத்தில் எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

பணியிடத்தில் உங்களுக்கு ஒரு விபத்து ஏற்பட்டால் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி Citizens Advice

வலைத்தளத்தில் சில சிறந்த ஆலோசனைகள் அளிக்கப்பட்டுள்ளன.

## வீட்டிலிருந்து வேலை செய்தல் அல்லது உங்கள் வேலை நேரத்தை மாற்றிக்கொள்ளுதல்

### நெகிழ்வுத்தன்மையுள்ள வேலை நேரத்தைக் கோருவதற்கான உரிமை

நீங்கள் வேலை செய்யும் விதத்தில் மாற்றங்கள் செய்யுமாறு நீங்கள் உங்கள் முதலாளியிடம் கேட்டுக்கொள்ளலாம், உதாரணமாக வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதித்தல் அல்லது நீங்கள் வேலை செய்யும் நேரங்களை மாற்றுதல் போன்றவை.

இது, **நெகிழ்வுத்தன்மையுள்ள வேலையைக் கோருவதற்கான உரிமை (right to request flexible working)** எனப்படுகிறது.

மாற்றங்களைச் செய்யாமலிருப்பதற்கு அவர்கள் ஒரு நல்ல காரணத்தைக் கொடுக்கவேண்டும்.

நெகிழ்வுத்தன்மையுள்ள வேலையைக் கோருவதற்கான உரிமை (**right to request flexible working**) **பணியாளர்களுக்கு(employees)** மட்டுமே பொருந்தும்.

நெகிழ்வுத்தன்மையுள்ள வேலை பற்றியும் எப்படி அதைக் கோரிப் பெறுவது என்பதைப் பற்றியும் Citizens Advice தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களைக் கொண்டுள்ளது.

## நீங்கள் எத்தனை மணிநேரம் வேலை செய்ய முடியும்

### வேலை நேர வழிகாட்டல் (Working Time Directive)

உங்கள் முதலாளி உங்களை ஒரு வாரத்தில் குறிப்பிட்ட மணிகளுக்கு மேல் வேலை

செய்யக் கட்டாயப்படுத்த முடியாமல் போகலாம்.

இது **வேலை நேர வழிகாட்டல் (working time directive)** அல்லது **வேலை நேர விதிமுறைகள் (working time regulations)** எனப்படுகிறது.

வேலை நேரக் கட்டுப்பாடுகள் **(working time regulations)**பணியாளர்கள் **(employees)**
மற்றும் **தொழிலாளிகளுக்கு (workers) மட்டுமே பொருந்தும்.**

சில வேலைகளுக்கு அதிக மணிநேரங்களுக்கு நீங்கள் வேலை செய்ய வேண்டும்.
அரசாங்கம் தங்கள் வலைத்தளத்தில் மிக விரிவான தகவல்களைக் கொண்டுள்ளது.